IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.

O.S. No.99/2021

Deposition of Witness for DW1.

Name : திருமதி.சுமி
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.02.2026.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

மனுவின் பெயரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு முதல் விசாரணைத் தொடர்ச்சி

16.09.2005 தேதியிட்ட வாதியின் தாயார் மற்றும் சகோதரி ஆகியோர் வாதிக்கு எழுதிக் கொடுத்த விடுதலைப்பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3. 20.032019 தேதியிட்ட ரீசர்வே எண்.271/26 ன் கூட்டு பட்டா பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.4. 08.07.2021 தேதியிட்ட ரீசர்வே எண்.271/26 ல் வீடு கட்டுவதற்கான வரைபட அனுமதி சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.5. 18.11.2021 தேதியிட்ட தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் காவல் துறையிடமிருந்து பெறப்பட்ட தகவல் (7– பக்கங்கள் கொண்டது) பி.வா.சா.ஆ.6.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தற்போது என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 குறிப்பிட்டிருக்கும் எங்களுடைய சொத்து காண்பிக்கப்பட்ட இடமும், நான் தாக்கல் செய்த எனது பி.வா.சா.ஆ.5. கட்டிட வரைபட அனுமதியில் என்னுடைய சொத்து என்று காண்பிக்கப்பட்ட இடமும் வேறு வேறானவை. அவ்வாறு இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், அளவுகள் எனக்கு தெரியவில்லை. ஆணையர் வரைபடத்தில் 271/5 ல் காட்டியுள்ளது எனது சொத்து இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 ல் ரீசர்வே எண்.271/26 என்று குறிப்பிட்டுள்ளது. ஆதலால் நீ.ம.சா.ஆ.2 தவறு என்று கூறுகிறேன்.

பி.வா.சா.ஆ.5 அனுமதி கிடைத்த நாள் 08.07.2021 ஆகும். அதை Sketch ல் மார்க் செய்திருக்கிறேன் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.5 ன் படி, கட்டிட அனுமதிக்கு நான் விண்ணப்பித்த தேதி 07.07.2021 என்றால், சரிதான். Approval Plan க்கு மனு செய்த போது நாங்கள் என்ன ஆவணங்களை கொடுத்தோம் என்றால், ஆதார் கார்ட், பட்டா, Tax ரசீதுகள் மற்றும் பத்திரம் கொடுத்திருப்போம் என்று நினைக்கிறேன். ரீசர்வே பிளான் கொடுத்தேனா என்றால், அது விபரம் எனக்கு தெரியவில்லை. ரீசர்வே பிளானை வேண்டுமென்றே கொடுக்காமல் அதிகாரிகளை கைவசப்படுத்தி மறுநாளே நாங்கள் Building Plan Approval வாங்கியிருக்கிறோம் என்றால், சரியல்ல. Approval Plan ரீசர்வே எண். 271/26 என்று குறிப்பிட்டு கொடுத்துள்ளார்கள், ஆனால் ரீசர்வே எண்.271 ல் 271/26 என்று ஒரு கண்டமே கிடையாது என்றால், 271/26 க்கு FMB plan கிடையாது. பி.வா.சா.ஆ.5 ல் condition no.14 ல் அனுமதிக்காக வழங்கப்பட்ட ஆவணங்களில் தவறுகள் ஏதேனும் பின்னால் கண்டறியப்பட்டால், கட்டிட உரிமை அனுமதி எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.6 மாவட்ட கண்காணிப்பாளருக்கு 19.08.2021 ல் நான் மனு கொடுத்தேன். அதன் அடிப்படையில் புகார் இரணியல் காவல் ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டு அவர் 24.08.2021 அன்று மற்றும் 31.08.2021 ஆகிய இரண்டு நாள்களும் என்னை விசாரணை செய்தார் என்றால், சரிதான். 24.08.2021 ல் இந்த வழக்கின் வாதி அரசு சர்வேயருக்கு கட்டணம் செலுத்தி சொத்தை அளந்து அதன் படி நடந்து கொள்கிறேன் என்றும் பிரச்சனை ஏற்படும் பட்சத்தில் நீதிமன்றம் மூலம் தீர்வு கண்டு கொள்கிறேன் என்று எழுதிக் கொடுத்தார் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.6 வரிசையில் பக்கம்5 ல், இன்று 31.08.2021 ல் 10 சென்ட் சரியாக உள்ளது. இதனை தற்போது அளக்கும் நிலை தற்போது எழவில்லை என்றும், எனக்கு பாதுகாப்பு தர வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். சர்வேயரை வைத்து அளந்தால் ரீசர்வே எண்.271/26 என்று ஒரு கண்டமே கிடையாது

என்பது தெரிந்து விடும் என்பதால், நான் சர்வேயர் வைத்து அளப்பதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.